# <u>Principal District Munsif Court, Sankarankovil.</u>

தேதி : 05.12.2024

**<u>அ.வ.எண்.</u>** 221/2016

பி.வா.சா.1 – முருகேஸ்வரி

**<u>பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** :-

என் தாயார் எழுதிக்கொடுத்துள்ள பி.வா.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ஆவணத்தில உள்ள சொத்துவிவரங்கள் எனக்குத் தெரியும். எனக்குப் படிக்கத் தெரியும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் எத்தனை சொத்துக்களை எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் மோட்டார் கிணறு, விவசாய நிலங்களும் எழுதிக்கொடுத்தார். அதில் ஒரு இடம் 2 ஏக்கரும் கூடுதல் செண்ட்டும் எழுதிக்கொடுத்தார். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி, எனது தாயார் என் பெயருக்கு 5 அயிட்டச் சொத்துக்களை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட, ஒவ்வொரு சொத்துக்களுக்கும் நான்குபுற மால்கள் தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்துக்களின் சர்வே எண் சரியாக ஞாபகமில்லை. ஒரு சொத்தின் சர்வே எண். 323, 322 என்று மட்டும் ஞாபகம் உள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா மாற்றம் செய்ய சங்கரன்கோவில் தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்தது பற்றி தெரியுமா என்றால் தெரியும். என் தகப்பனார் மூலம் நான் மனு கொடுத்தேன். பி.வா.சா.ஆ.3 ஆவணம் எந்த காலத்திலும் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் வழக்குச் சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை நாங்கள் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்தை செட்டில்மெண்ட்டில் எழுதி வைக்க எனது தாயாருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவித்ததில்லை என்றாலும், அதனால்தான் எனக்கு சொத்தைப் பற்றி தெரியவில்லை என்றால் சரியல்ல. நான்தான் அனுபவித்து வருகிறேன். எனது தந்தையும் எனது சகோதரிகளும் என் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ள பி.வா.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தில் எவ்வளவு சொத்துக்களைப் பொறுத்து ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் 1 ஏக்கர் 10 செண்ட்டைப் பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளார்கள்.

பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை எழுதிக்கொடுத்தபோது, என் தகப்பனார் உயிருடன் இருந்தநிலையில், எனது சகோதரிகளும் அந்த ஆவணத்தில் விடுதலை எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியம் என்னவென்றால், விடுதலை கொடுப்பதில் எனது சகோதரிகளுக்கும் சம்மதம் என்பதற்காக அந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்தார்கள். பி.வா.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தை எழுதிக்கொடுக்க எனது சகோதரிகளுக்கு உரிமை இல்லை என்றாலும் சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும என்பதற்காக நாங்கள் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தை நான் படித்துப் பார்த்துள்ளேன். பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் எத்தனை அயிட்டச் சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் யார் சாட்சிக் கையொப்பம் போட்டுள்ளார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் லட்சுமண ரெட்டியார் மற்றும் அழகு ரெட்டியார் ஆகியோர் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளார்கள். நான் மேலே சொன்ன 2 நபர்களும் பி.வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் சாட்சிக் கையொப்பம் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.2 உயிலில் கண்ட சொத்துக்களையும் வேறு பல சொத்துக்களையும் என் தகப்பனாரும் என் சித்தப்பாவும் பாகம் பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் பாகம் பிரித்தது உண்மை. ஆனால் உயிலில் கண்ட சொத்தை எனது தகப்பனார் அனுபவித்து வருகிறார். வேறு சொத்தை என் சித்தப்பா அனுபவித்து வருகிறார். பிராது தபசில் சொத்து விவரங்களை நான் படித்துப் பார்த்தேன். பிராது தபசில் சொத்துக்களை வாதிகள்தான் சர்வசுதந்திரமாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நாங்களும் அனுபவித்து வருகிறோம். வாதிகளும் அனுபவித்து வருகிறார்கள். பிராதில் கண்ட சொத்துக்கள் அனைத்தும் எனது சித்தப்பாவுக்கு பாகம் மூலம் கிடைத்து, அச்சொத்துக்களை அவர் தன்னுடைய மகள்களான வாதிகளுக்கு செட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்து, இன்றுவரை பிராது தபசில் சொத்துக்களை வாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்தை நாங்களும் அனுபவித்து வருகிறோம். வாதிகளும் அனுபவித்து வருகிறார்கள். வாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை.

வழக்குச் சொத்து விவரங்களைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், என் தந்தை தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்றாலும் எனக்கு வழக்கைப் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. எனக்குத் தெரியும். வழக்குச் சொத்து முழுவதையும் என் சித்தப்பா 16.04.2008 மற்றும் 08.04.2010 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணங்கள் வாதிகளுக்கு எழுதிக்கொடுத்து, இன்றுவரை வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்களுக்கு சங்கரன்கோவில் வட்டாட்சியரால் பட்டாக்கள் வழங்கப்பட்டு, இன்று வரை வாதிகள்தான் வழக்குச் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கும் எங்களுக்கும் எந்தகாலத்திலும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் பெண்கள் என்பதால், அவர்களை ஏமாற்றி சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாங்கள் மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் வழக்குச் சொத்தில் வாதிகளின் உரிமையை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி வழக்குத் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

(Sd.) xxxxxxx
Principal District Munsif,
Sankarankovil.